O/L 2026

# மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) முதலாம் தவணைப் பரீட்சை – 2026

General Certificate of Education (Ord. Level) 1st Term Exam – 2026

| தமிழ்மொழியும் இலக்கியமும் | 22 | T | I,II | மூன்று மணித்தியாலம் பத்து நிமிடம் |
|---|---|---|---|---|

அறிவுறுத்தல்:

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
2. விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
3. விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
4. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி ( X ) இடுவதன் மூலம் காட்டுக.

## பகுதி I

- தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவிற்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க

01. "தெண்ணீர்க்கயத்துட் சிறுமீன்சினையினும் நுண்ணிதே" இங்கு **கயம்** என்பது.
   1) மீன் 2) குளம் 3) முட்டை 4) மலை

02. "செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்..." இங்கு **செயிர்** என்பது
   1) கோபம் 2) பாவம் 3) மானம் 4) போர்

03. "ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும் தான்புக் கழுந்தும் அளறு" இங்கு **அளறு** என்பதன் எதிர் கருத்து
   1) இன்பம் 2) துன்பம் 3) நரகம் 4) அளவு

04. 'தனது அந்தரங்க நண்பர்கள் மூலம் நாவலர் அவர்களுக்குத் தெரிவித்தார்' இதில் **அந்தரங்கம்** என்பதன் எதிர்க்கருத்து
   1) விருப்பம் 2) ஆவேசம் 3) இரகசியம் 4) பகிரங்கம்

05. "வெகுளி பொங்கிப் பகைவரை நிந்திப்பர்..." இங்கு **வெகுளி** என்பதன் எதிர்ப்பொருள்
   (1) கோபம் (2) துன்பம் (3) அழுகை (4) சாந்தம்

- **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

06. பின்வருவனவற்றுள் பொருளால் வேறுபட்டது.
   1) அரவம், பாம்பு, சிலம்பு, ஆரவாரம் 3) நாகம், பாம்பு, மலை, யானை
   2) பதி, அரசன், வீடு, இறைவன் 4) ஆழி, கடல், சக்கரம் அரி

07. ஒரு பொருள் தரும் இணைமொழியாக அமையும் தொடர்
   1) ஆதிஅந்தம் 3) குன்றுங்குழியும்
   2) வாடிவதங்கி 4) அல்லும்பகலும்

08. தேர் செலுத்துபவன்
   1) விமானி 2) இடையன் 3) பாகன் 4) சாரதி



kalvi.lk

09. இன்றைய உலகின் மீடியாவின் செல்வாக்கு அதிகமாக உள்ளது மீடியா(media) என்பதன் தமிழ் வடிவம்
1) இணையம் 2) தொலைபேசி 3) ஊடகம் 4) தொலைக்காட்சி

10. அடியொற்றுதல் என்ற மரபுத்தொடரின் கருத்து
1) பின்பற்றுதல் 2) வெளிப்படை 3)விளக்கமான கல்வி 4) நீக்கிவிடுதல்

11. பிற்கால தேவைக்காக சேமித்து வைக்கப்படும் பொருள் .
1) ஏகபோகம் 2) ஓம்படை 3) மானியம் 4) எய்ப்பில் வைப்பு

12. 'சீ !_ வெளியே போ இவ்வாக்கியம்" உணர்த்தும் பொருள்.
1) அச்சம் 2) விரைவு 3) கோபம் 4) துன்பம்

13. வெட்டவெளியாக கூறினான் இங்கு வெட்டவெளி என்பது
1) அடுக்கிடுக்குத்தொடர் 3) இரட்டைகிழவி
2) இணைமொழி 4) அடுக்குதொடர்

14. அத்திரம், தளிர், மேகம் எனும் பல சொற்கள் குறிப்பது.
1) சக்கரம் 2) அம்பு 3) மறை 4) இழை

15. சப்பாத்து என்பது எம் மொழிச்சொல்?
1) பாரசீகம் 2) ஒல்லாந்து 3) மராட்டி 4) போத்துக்கேயம்

16. உயரஉயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா எனும் பழமொழிக்கு ஈடான பிறிதோர் பழமொழி
1) பதறாத காரியம் சிதறாது 3) கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா
2) முயற்சி திருவினையாக்கும் 4) மனமுண்டால் இடமுண்டு

17. அ. சுற்றுச்சூழல் நன்றாகப் பேணப்படுகிறது.
ஆ. நுளம்பின் பெருக்கம் குறித்து அச்சப்படத்தேவையில்லை.
மேற்படி வாக்கியங்களை இணைப்பதற்கு மிகப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்
1) எனவே 2) எனினும் 3) அத்துடன் 4) ஆனால்

18. ஒரு குழுவினர் இன்னொரு குழுவினர் அறியாத வகையில் தங்களிடையே வழங்கும் சொற்கள்
1) இலக்கணப்போலி 2) இடக்கரடக்கல் 3) மங்கலம் 4) குழூஉக்குறி

19. மூன்று மெய்கள் மயங்கி இடம்பெற்ற சொல்
1) கைம்மருந்து 2) பட்டம் 3) வாழ்க்கை 4) தங்கை

20. மன்னனே வாழ்க இதில் வாழ்க என்பது
1) ஏவல் வாக்கியம் 2) வியங்கோள் வாக்கியம்
2) முற்று வாக்கியம 4) செய்வினை வாக்கியம்

21. உயிரளபெடைக்கு உதாரணம்
1) இலங்ங்கு 2) ஓஓதல் 3) எம்ம்மிறை 4) அரண்ண்

22. 'ஓய்வு பெற்ற பேராசிரியர் 60 வருட நிறைவு விழாவைக் கொண்டாடினார்' இவ்விழா
1) வெள்ளி விழா 2) பொன் விழா 3) பவளவிழா 4) மணி விழா

23. தமிழில் உள்ள உயிர்மெய் நெடில் எழுத்துகளின் எண்ணிக்கை.
1) 90 2) 126 3) 247 4) 216



kalvi.lk

24. இலக்கணப் போலியாக அமைந்த சொல்
   1) புறநகர் 2) கால்வாய் 3) இல்முன் 4) வாய்க்கடை

25. செத்தான், கண்டான், கொன்றான், செய்வித்தான் ஆகிய வினைச்சொற்களின் பகுதிகளைச் சரியாக கொண்ட தொகுதி.
   1) செத்து, கண் கொன், செய் 3) சா, காண், கொன்று, செய்வி
   2) சா, கண்டு, கொல், செய்வி 4) சா, காண், கொல், செய்வி

26. "ஓடுமீன்ஓட உறுமீன் வரும் அளவும்" இங்கு இடம்பெறும் **உறு** என்பது
   1) பெயர்பகுபதம் 2) உரிப்பகுபதம் 3) வினைப்பகுபதம் 4) உரிப்பகாப்பதம்

27. பின்வருவனவற்றுள் முன்னொட்டு ஏற்காத சொல்
   1) அநீதி 2) நோயாளி 3) அவமதி 4) முன்னோக்கு

28. சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன.
   1) ஐம்பொறி 2) ஐங்குணம் 3) ஐம்புலன் 4) ஐந்நிலம்

- **பெருத்தமற்ற உதாரணம் அமைந்த சொற்தொகுதியை தெரிவு செய்க**

29. 1) வினையாலணையும் பெயர் - வந்தவன், எறிந்தவன், நடந்தவன்
   2) வினைச்சொல் - எறிந்தான், நடந்தான், வந்தான்
   3) வினையெச்சம் - எறிந்து, நடந்த, வந்து
   4) இடைச்சொல் - கொல், .தவ, நனி, ஆல்.

30. 1) ஆக்கப் பெயர் - புத்திசாலி, கொடையாளி, முயற்சி.
   2) கூட்டுப்பெயர் - வானொலி, கண்காட்சி, கடற்கரை.
   3) காரணப்பெயர் - மலை, மரம், காலணி
   4) இடப்பெயர் - வீடு, மைதானம், கண்டி

- <u>புள்ளி கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க</u>

31. பாதிக்கப்பட்ட மக்களுக்கு.............. வழங்க அரசு தீர்மானித்துள்ளது.
   1) இழப்பீடு 2) காப்பீடு 3) சன்மானம் 4) ஊதியம்

32. ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த ஏனையவர்கள் வழங்கும் உரை
   1. முன்னுரை 2. பதிப்புரை 3) அணிந்துரை 4) பரிந்துரை

33. மக்கள் கூட்டம் வெள்ளம்போல் .................
   1) திரண்டனர் 2)திரண்டது 3) திரண்டார்கள் 4) திரண்டன

34. அரசின் நிதி சேகரித்து வைக்கும் இடம்.................. ஆகும்
   1) மடம் 2) அன்னசாலை 3) ஆதுலர்சாலை 4) திறைசேரி

- வாக்கியங்களின் முற்பகுதிக்கு பொருத்தமான முடிக்கும் பகுதியை தெரிவு செய்க

35. வெள்ளம் போல் மாணவர் கூட்டம் .............................
   1) திரண்டது 2) திரண்டன 3) திரண்டனர் 4) திரண்டார்கள்

36. அந்த மரத்தின் ஒவ்வொரு.........................
   1) பழமும் நல்லது. 2) பழங்களும் நல்லவை.
   3) பழமும் நல்லவை 4) பழங்களும் நல்லது



Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

• கீழே தரப்படும் பாடலை அடிப்படையாக கொண்டு வினாக்களுக்கு விடை தருக

தமிழ்மொழிப் பெருமையெல்லாம்
தண்மையும் உண்மைதானும்
அமிழ்தென அதனைச்சொல்லல்
அழிவிலா அறிவுக்காக
குமிழ்தர இவற்றின் மேன்மை
குலவிடும் கவியால் ஞானம்
கமழ்தரச்செய்யும்

37. இங்கு பேசும் பொருளாக அமைவது
1)அழிவில்லா அறிவு 2) அமுதத்தின் சிறப்பு 3) தமிழின் பெருமை 4) ஞானத்தின் வாசனை

38. தமிழ், அமிழ், குமிழ் ஆகிய சொற்களில் பயின்றுள்ள அணி யாது?
1) மோனை 2) சிலேடை 3) மடக்கு 4) எதுகை

39. ஞானம் கமழ்தரச்செய்யும் இங்கு கமழ் என்பது
1) ஒளி 2) பரவுதல் 3) வாசனை 4) வீசுதல்

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றி காணப்படுகின்றன அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையை தெரிவு செய்க

அ. குரல் பயிற்சி மிக முக்கியமானதொன்று.

ஆ. வார்த்தைகளிலே ஏற்றத்தாழ்வு இருக்க வேண்டும்.

இ. பேசும்போது மென்மையாகவும் வன்மையாகவும் பேசவேண்டிய வார்த்தைகள் உண்டு.

ஈ. எனவே பல்வேறுபட்ட உணர்ச்சிகளை எளிதாக காட்ட இப்பயிறசி முக்கியமாகும்.

உ. அன்பு காட்டிப் பேசுவதும் ஆத்திரத்தோடு பேசுவதும் குரலிலேயே தெரிய வேண்டும்

1). இ,உ,அ,ஆ,ஈ 2) இ,ஈ,அ,உ,ஆ 3) அ,இ,ஆ,உ,ஈ 4) உ,ஈ,இ,ஆ,அ



kalvi.lk

## பகுதி II

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01). சுருக்கமான விடை தருக.

1. " அடியின்மிசை நெடிதுவீழ்ந் தழுவானை யிவன்யா ரென்று...." எனும் சொற்றொடரைப் பிரித்தெழுதுக.
2. பின்வரும் வாக்கியத்திற்குப் பொருத்தமான நிறுத்தக் குறியீடுகளையிட்டு மீண்டும் எழுதுக.

   எந்த நேரமும் சாப்பாடு பற்றித்தான் எண்ணமும் கதையும் இப்ப இதுக்கென்ன அவசரம் தம்பி எங்கே
3. பின்வரும் பேச்சு வழக்குத் தொடரை நியம வழக்கில் எழுதுக.

   "ஒனக்கு நன்ம கெடைக்கும். இதக் குடுத்துட்டு வா புள்ள"
4. 'ஆடம்பரமும், அதிக பணமும் கொண்ட சொகுசான வாழ்க்கையை அவள் விரும்பினாள். இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள எழுவாய், பயனிலையைக் குறிப்பிடுக?
5. 'பணி' என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்க வகையில் ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.
6. மக்கள் பலர் நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டனர். இச் செயப்பாட்டு வினை வாக்கியத்தை செய்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.
7. நீ என்னுடன் தேவாலயத்திற்கு வருகிறாயா? இல்லையா? இவ் வாக்கியத்தில் இடம்பெற்ற இடைச்சொல் யாது?
8. கொழும்பில் சுயதொழில் செய்யும் இளைஞர்களை ஊக்குவிக்கும் மத்திய நிலையம் அமையுமென விவசாய அமைச்சர் தெரிவித்தார். இவ் வாக்கியத்தை பொருள் மயக்கம் அற்ற முறையில் திருத்தி எழுதுக.
9. நாளை வருவான் ஒரு மனிதன் என்று நீலாவணன் பாடினார். இவ் வாக்கியத்தின் தலைமைத் தொடரையும், சார்புத்தொடரையும் இனங்கண்டு எழுதுக.
10. பின்வரும் வாக்கியத்தில் இடம்பெறும் வினையடை யாது?

    கரிய பெரிய யானைகள் பயங்கரமாக பிளிறின.

(20 புள்ளிகள்)



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாள 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

1. அண்மையில் எமது நாட்டில் ஏற்பட்ட பேரிடர் பற்றி நாம் அனைவரும் அறிந்ததே. இயற்கைச் சமநிலை காலத்திற்கு காலம் மாறுபடும் அதற்கேற்ப அனர்த்தங்களின் தோற்றமும் மாறுபடும். எனவே இவ் அனர்த்தங்கள் பற்றி முன்னெச்சரிக்கையாக இருக்கவேண்டும். இவ்வாறான அனர்த்தங்களால் பொருளாதாரம், கல்வி, சமூக அமைப்பு, மக்கள் வாழ்வு, சுற்றுப்புற சூழல் என்பனவும் பாதிப்புக்குள்ளாகிறன. இயற்கை அனர்த்தங்கள் அவை ஏற்படுத்தும் பாதிப்புகள், அனர்த்தங்கள் பற்றிய முன்னெச்சரிக்கையை அலட்சியப்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள், நிலைகுலைந்த தேசத்தைக் கட்டியெழுப்ப மேற்கொள்ளும் செயற்பாடுகள் என்பனவற்றை வலியுறுத்தி ஒரு விளக்கக் கட்டுரை எழுதுக.

2. இன்றைய காலத்தில் தொழில்நுட்ப வளர்ச்சி அவசர வாழ்க்கை முறையோடு செல்கிறது. இதனால் எமது பழமையான சமயப் பண்பாடுகள், சமய விழுமியங்கள் அருகிச்செல்கின்றன. பண்பாடோடு கூடிய கல்வி, சமூக அடித்தளத்தை பலப்படுத்த உதவுவதோடு குழந்தைகள் மற்றும் இளம் தலைமுறைக்கு மனநலம், சமூக ஒற்றுமை, பொது நற்பண்பு ஆகியவற்றைக் கற்றுக் கொடுக்கிறது. தொழில்நுட்ப வளர்ச்சி இருந்தாலும் பண்பாட்டம்சங்கள் மறுக்கப்படாமல் இருக்கவேண்டும். எனவே குறைந்து செல்கின்ற சமய விழுமியங்கள் அதனை மீட்டெடுக்க வேண்டியதன் அவசியம் என்பன தொடர்பாக ஆசிரியருக்கும் மாணவனுக்கும் இடையிலான உரையாடல்.

3. குடும்ப வன்முறைகளால் பிள்ளைகளின் மனநலம் பெரிதும் பாதிக்கிறது. அவர்களின் கல்வியில் பெரும் தாக்கத்தையும் ஏற்படுத்துகிறது. பெரியவர்களின் தவறான செயற்பாடு அவர்களின் எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்குகின்றது. போதைக்கு அடிமையாதல், முறையற்ற சமூக ஊடகப் பயன்பாடு, பொருளாதார நெருக்கடி என்பவை சந்தேகத்தையும் வன்முறையையும் தூண்டுகின்றன. இவ்வாறான நிலைமைகளிலிருந்து மீளெழுவது தொடர்பாக முன்வைக்கக் கூடிய விழிப்புணர்வு செயற்பாடுகள் தொடர்பாக நீர் ஆற்றும் மேடைப்பேச்சு.

4. ஏழைக்குடும்பத்தில் பிறந்த சஜி சின்னஞ்சிறு வயதில் தன் பெற்றோரை இழந்த நிலையில் கூலி வேலை செய்துவந்தாள். எனினும் தன் தம்பி மதியை உரிய முறையில் படிக்க வைத்து அவனது உயர் கல்வியைத் தொடர்ந்து அவன் விருப்பப்படியே கல்வி கற்க வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்கிறாள். இதனைத் தொடர்ந்து நடைபெறும் நிகழ்வுகளை உள்ளடக்கிய ஒரு சிறுகதை.

(25புள்ளிகள்)



kalvi.lk

03. பின்வரும் உரைப் பகுதியை 45- 50 சொற்களில் சுருக்கி எழுதுக.

பழமையைப் பற்றிப் பேசும்பொழுது, நாங்கள் பண்டைக் காலத்து நற்குணங்களைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறோம். "அப்பேர்ப்பட்ட தன்மைகள் நம்மவர்களுக்குத் தற்போது மிகமிகக் தேவை" என்று பழமைப் பிரியர்கள் தங்கள் பழமை மோகத்துக்கு வியாக்கியானஞ் செய்யலாம் இதுவும் அபத்தமாகும். பாண்டவர்களுக்கு பங்கு கொடுக்கமாட்டேன் என்று வல்லடி வழக்கம் பேசிய துரியோதனனும் அவனைச் சேர்ந்தவர்களும் நற்குணம் படைத்தவர்களா? வீட்டில் தனது மனைவி மனவேதனைப்பட்டுக்கொண்டிருக்க, விலைமாதின் இல்லம் சென்ற கோவலனைப் போல பழமைப் பிரியர்கள் வாழ உளம் கொண்டிருக்கிறார்களா? எல்லாக் காலங்களிலும் நல்லவர்களும் தீயவர்களும் கலந்துதான் இருக்கின்றார்கள் என்ற உண்மை, பழமையின் மோகம் கொண்டவர்களின் கண்ணில் படாதது நமது நாட்டின் துர்ப்பாக்கியமே. வள்ளுவனார் காலத்துத் தமிழ், அந்தக் காலத்து காசுகள், அக்காலத்து நடையுடை பாவனைகள், அரசியல் முறைமை, வாழ்க்கைத் திட்டம் எதுவும் இக்காலத்துக்குத் துளிக்கூட பொருத்தமே இல்லை செல்லவும் செல்லாது.

பழமை இனி ஒரு நாளும் திரும்பி வர முடியாது. பழமையைப் பற்றிப் பேசுவது, மரித்துப் போன குழந்தையைப் பற்றி புலம்புவதுபோல என்பதுதான் உண்மை. சிந்தனா சக்தியை இழந்தவர்கள்தான் பழமையைப் பற்றி கிளிப்பிள்ளைகளைப்போல பேசுவார்கள். உலகம், விஞ்ஞானத்திலும் பொருளா தாரத்திலும் அரசியல் திட்டத்திலும் பிரமிக்கத்தக்க முற்போக்கு அடைந்து வருகிறது. இந்த முற்போக்கைப் போலவே, வெறுக்கத்தக்க தன்மைகளும் நிலைமைகளும், நாளுக்குநாள் மலிந்து வருகின்றன. இந்தக் காலத்தைச் சமாளித்து, வெற்றியுடனும் சுகப்பெருக்குடனும் சுதந்திரத்துடனும் வாழ வழிகளைத் தேடுவதுதான் புத்திசாலித்தனமாகும். அதுதான் பொறுப்பு வாய்ந்த தன்மையாகும். மனிதனுடைய செயல் திறனையும் சாகஸத் திறனையும் சிந்தனா சக்தியையும் உபயோகித்து விமோசனத்துக்கு மார்க்கத்தைத் தேடுவதற்கு இதுதான் தக்க தருணம். கரணம் தப்பினால் மரணம். இந்தச் சந்தர்ப்பத்தை நழுவிட்டுவிட்டு, பழைமையைப் பற்றிப் பேசுவது விபரீதமாக முடியும். பழமையிலுள்ள நல்லவைகளையும் உபயோகமுள்ளவைகளையும் வைத்துக் கொண்டு, புதுமையைப் படைப்பதுதான் சிநதனையாளர்களுக்கு அழகாகும்.

(10 புள்ளிகள்)



kalvi.lk

04 பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

மாறாத எதுவும் வளர்ச்சியடைவதில்லை. மொழி இதற்கு விதிவிலக்கல்ல. வாழும் மொழிகள் எல்லாம் இடையறாது மாற்றத்திற்கு உள்ளாகின்றன. அதனால் தொடர்ந்து வளர்ச்சியடைகின்றன மாற்றமும் வளர்ச்சியும் ஒரு நிகழ்ச்சியின் இரு அம்சங்களாகும். மொழி ஒரு சமூக சாதனம் என்ற வகையில் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களும் வளர்ச்சிகளுமே மொழி மாற்றத்தையும் வளர்ச்சியையும் இறுதியாகத் தீர்மானிக்கின்றன. எனினும் முற்காலத்தில் மொழி வளர்ச்சி பெரிதும் பிரஞ்ஞை பூர்வமான ஒரு நிகழ்வாக இருக்கவில்லை. அதனாலேயே மொழி வளர்ச்சி பற்றிய திட்டங்களும் கொள்கைகளும் பழைய மொழி நூல்களில் காணப்படவில்லை. ஆனால் இன்றைய கைத்தொழில் நாகரிக யுகத்தில் பிற துறைகள் போல மொழி வளர்ச்சியும் பிரக்ஞை பூர்வமான ஒரு நிகழ்வாக உள்ளது. மொழி வளர்ச்சி பற்றிய பல்வேறு கொள்கைகளும் திட்டங்களும் செய்முறைகளும் பின்பற்றப்படுகின்றன. கருத்து முரண்பாடுகளும் மோதல்களும் நிகழ்கின்றன. மொழியை நவீனப்படுத்துவதே இவற்றின் குறிக்கோள் ஆகும். மொழியை நவீனப்படுத்துதல் என்பது தற்கால சமூகத்தின் நவீன தொடர்பாடல் தேவைகளுக்கேற்ப மொழியை வளர்த்தல் அல்லது இணக்கப்படுத்தலேயாகும்.

1. பந்தியில் கூறப்பட்டுள்ள முக்கிய விடயம் யாது?
2. மொழியின் மாற்றத்தையும் வளர்ச்சியையும் தீர்மானிக்கும் காரணிகள் எவை?
3. பழைய மொழி நூல்களில் மொழி வளர்ச்சி பற்றிய திட்டங்கள் பற்றி காணப்படாமைக்கான காரணம் யாது?
4. மொழியை நவீனப்படுத்தல் என்றால் என்ன?
5. மாற்றமும் வளர்ச்சியும் ஒரு நிகழ்ச்சியின் இரு அம்சங்களாகும் விளக்குக.

(10 புள்ளிகள்)

05. வண்ணமயில் கிராமத்தில் வசிக்கின்ற கணிசமான தொகை மாணவர்கள், நகர்ப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர். ஆயினும் பேருந்துச் சேவை குறைவாகக் காணப்படுவதால் அவர்கள் நேரத்திற்குப் பாடசாலைக்குச் சமூகமளிக்க முடியாது இடர்படுகின்றனர். எனவே இக்குறைபாட்டை நீக்குமுகமாக மாணவர்களுக்கான விசேட பேருந்துச் சேவை ஒன்றை ஒழுங்கு செய்து தருமாறு வலியுறுத்தி பிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைவர் ச. தமிழின்பனுக்கு 100 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

தமிழ் மத்திய மகாவித்தியாலயம், கண்டி, தமிழ் மன்றத்தின் செயலாளர் தமிழ்ச்செல்வன் என்று உம்மைக் கருதிக்கொண்டு தமிழ் மன்றத்தின் மாதாந்த கூட்டறிக்கையை 100 சொற்களுக்கு குறையாமல் எழுதுக

(15 புள்ளிகள்)



kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) முதலாம் தவணைப் பரீட்சை – 2026

General Certificate of Education (Ord. Level) 1st Term Exam – 2026

| தமிழ்மொழியும் இலக்கியமும் | 22 | T | III | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|---|---|

அறிவுறுத்தல்:

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
2. விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
3. விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
4. 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகியவற்றில் எவையேனும் ஒரு வினாவிற்கும் விடை தருக.

பகுதி III

01. சுருக்கமான விடை எழுதுக.

i. ." அண்ணல் யானை அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழலாகுமே.."
 அ. அண்ணல் யானை என்பதன் கருத்து யாது?
 ஆ. இவ்வடிகளில் குறிப்பிடப்படும் நாற்படைகளும் எவை?

ii. " ஆர் தட்டினும் தட்டு வராமாலே அன்னதானத்திற்கு மார் தட்டிய
துரைமால் சீதக்காதி வரோதயனே..."
 அ. இங்கு வரோதயன் என்பதன் கருத்து யாது?
 ஆ. இவ்வடிகளில் சிறப்பிக்கப்படும் கொடை வள்ளல் யார்?

iii. இன்துணைவன் இராகவனுக்கு, இலக்குவற்கும் இளையாவற்கும்
எனக்கும் மூத்தான்... "
 அ. இங்கு மூத்தான் எனப்படுவது யார்?
 ஆ. இளையவன் என்பது யாரை சுட்டுகின்றது?

iv. "திணிமணல் செய்யுறு பாவைக்கு கொய்பூத் தைஇ.."
 அ. இங்கு திணிமணல் என்பது உணர்த்தும் கருத்து யாது?
 ஆ. இவ்வடிகளில் குறிப்பிடப்படும் விளையாட்டு எது?

v. வேதம் மூன்றும் பலா உள்ள நாடு விசேஷம் மூன்றும் குலா உள்ள நாடு"
 அ. இங்கு குறிப்பிடப்படும் நாட்டின் பெயர் யாது?
 ஆ. விசேஷம் என்பதில் அடங்குபவை எவை?

vi. ."அவர் தனது வலியை அங்கவஸ்திரத்தில் ஆவாகனம் பண்ணி
பக்கத்தில் வைத்து விட்டு பாடஞ் சொல்வது வழக்கம்.."
 அ. இங்கு அவர் எனச் சுட்டப்படுவது யார்?
 ஆ. ஆவாகனம் என்பதன் கருத்து யாது?

vii. " பொய்படும் ஒன்றோ புனை பூணும் கையறியாப்
பேதை வினை மேற்கொளின்"
 அ. இக்குறளின் பொருளை உமது மொழிநடையில் எழுதுக?
 ஆ. பேதை ஓர் செயலைச் செய்தால் யாது நிகழும்?

viii. ." கதிகள் யாவும் தருமென ஓர்ந்திடார் கண்ணில்லாதவர் போல
திகைப்பர் காண்.."
 அ. கதி என்பது உணர்த்தும் கருத்து யாது?
 ஆ. இவ்வடிகளில் பயின்று வந்துள்ள அணி யாது?



kalvi.lk

 KGcripe GupliAlaf [All Rights Reserved]

ix. ." 486 கம்பியூட்டர் என்று உச்சாடனம் செய்தவாறே அதன் வீரப்பிரதாபங்களைப் பற்றி ஒரு பரணி பாடினார்.."
அ. உச்சாடனம் என்பது குறிக்கும் கருத்து யாது?
ஆ. இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள சிற்றிலக்கிய வகையினைக் குறிப்பிடுக?

x. "கார் தட்டிய பஞ்ச காலத்திலே தங்கள் காரியப் பேர்.."
அ. கார் தட்டிய என்பது குறிக்கும் கருத்து யாது?
ஆ. காரியப்பேர் என்பதன் யாது?

(20 புள்ளிகள்)

**02. பின்வரும் செய்யுட் பகுதிகளையும், உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. உப்பிலாக் கஞ்சியினை உண்ணும் அறுசுவை போல்
தப்பிய கந்தைப் பீதாம்பரம் போல் ஒப்பும்
பனையோலைப் பாயில் படுத்து உறங்கும் வாழ்வார்
மனம் கொண்டது மாளிகை

அ. ஒருவனுக்கு மனநிறைவைத் தரும் விடயங்கள எவை?
ஆ. இப்பாடலில் கூறப்பட்டுள்ள முதுமொழி யாது?

2. தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்து இன்புறார் ஆயினும் கையின்
ஈர்த்து இன்புறூஉம் இளையோர் போல
உற்று இன்புறேம் ஆயினும் நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்து இன்புற்றனெம் செறிந்தன வளையே

அ. தலைவனது சிறப்புக்களாகக் கூறப்பட்டிருப்பவை எவை?
ஆ. தலைவயின் கைவளையல்கள் செறிந்தமைக்கான காரணம் யாது?

3. ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும்
கார் தட்டிய பஞ்ச காலத்திலே தங்கள் காரியப் பேர்
ஆர் தட்டினும் தட்டு வராமலே அன்னதானத்திற்கு
மார் தட்டிய துரைமால் சீதக்காதி வரோதயனே.

அ. பஞ்சகாலத்தின் கொடுமை எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?
ஆ. சீதாக்காதியின் கொடைத்திறன் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?

4. காட்சிப்படிமங்களின் மூலம் மட்டுமே பொறாமை, எரிச்சல், அதிருப்தி, பொறுமையின்மை எனும் மனித மனத்தின் வெவ்வேறு நிலைகளை ஹிட்சார்க் காட்டினார். காட்சிப்படிமங்கள் மூலம் சொல்லக்கூடிய ஒன்றை வார்த்தை மூலம் கூற முயன்றால் அங்கே சினிமா சீரழிகின்றது என்கின்றார் ஹிட்சார்க். தமிழ் சினிமாவில் காட்சிப்படிமங்களால் கதை சொல்லும் முறை சரியாக வளரவில்லை. இது இந்தி சினிமாவுக்கும் பொருந்தும். பேசும் படம் பிறந்த நாளிலிருந்து, பேசும் பேச்சால் கதை சொல்லும் வழக்கம் வேரூன்றி, அது ஒரு பாரம்பரியமாகவே ஆகிவிட்டது. எப்படி? மௌனப் பட நாடகங்களில், புராணக் கதைகளே படமாக்கப்பட்டன. இவை மக்களுக்கு நன்கு தெரிந்திருந்த கதைகள். ஆகவே காட்சிப்படிமங்கள் மூலம் கதையை உணர்த்த வேண்டிய அவசியம் இல்லாமல் போனது.

அ. காட்சிப்படிமங்களின் மூலம் வெளிப்படுத்தப்படும் மனித உணர்ச்சிகள் எவை?
ஆ. காட்சிப்படிமங்கள் மூலம் கதைகளை உணர்த்த வேண்டிய அவசியம் இல்லாமைக்கான காரணம் யாது?

5. தருமபுத்திரர் அறத்தையே இலட்சியமாகக் கொண்டவராய் அறத்தின் பயனாகக் கிடைத்த முக்தியின்பத்தையே தியாகஞ்செய்து சமநிலையே நின்றமையாற் சிறந்த அறநெறிச் செல்வர்களுக்கும் உயர்ந்த உதாரணமாகின்றார். அவர் முக்தியுலகத்திற்குச் செல்லும் வழியில் இலட்சிய சோதனை நடக்கின்றது. புழுத்த நாயொன்றை அங்கு காண்கின்றார். பிற உயிர்களைத் தம்முயிரிற்கண்ட சமநெறிச் செல்வராகிய அவர் தமக்கும் நாய்க்குமிடையே ஒருமை காண்கின்றார். அதன் துன்பத்தை தமக்கு வந்ததாக பாவிக்கின்றார். நாயை தோளிலே



kalvi.lk

தூக்கிவைத்துக் கொண்டு முக்தியுலக வாயிலை அடைகின்றார். நாயை வெளியே விட்டு உள்ளே புகுமாறு முக்தியுலகம் உத்தரவிடுகின்றது. இந்த நாய்க்கு உரிமையில்லாத முக்தியுலகம் எனக்கு வேண்டாமென மறுத்துக் கூறுகின்றார். அறத்தின் பயனாக முக்தியையும் உடன் கொண்டு முக்தியுலகம் புகுகின்றார்.

அ. தருமபுத்திரரின் இலட்சியம் எவ்வாறு காட்டப்படுகின்றது?
ஆ. தருமபுத்திரர் முக்தியுலகம் செல்லும் போது ஏற்பட்ட சோதனை யாது?

(20 புள்ளிகள்)

03. **திருக்குறள் பேதைமை அதிகாரத்தில்,**

அ. பேதையரின் செயலால் ஏற்படும் துன்பம்
ஆ. உவமையணி கையாட்சி
ஆகியன புலப்படுமாற்றினை விளக்குக.

**அல்லது**

கம்பியூட்டர் சிறுகதையில்,

அ. கம்பியூட்டருடன் குடும்பத்தவர் கொண்டிருந்த ஈடுபாடு
ஆ. நகைச்சுவை உணர்ச்சி
என்பன புலப்படுமாற்றினைத் தெளிவுறுத்துக.

(15 புள்ளிகள்)

04. நாவலர் **எழுந்தார்** கட்டுரையில்,

அ. நாவலர் அவர்களின் ஆளுமை
ஆ. கட்டுரையாசிரியரின் சம்பவச் சித்தரிப்பு
என்பன குறித்து தெளிவுறுத்துக.

**அல்லது**

**குகப்படலம்** பகுதியில்,

அ. கோசலையின் பெருமையும்
ஆ. கைகேயியின் இழிவும்
விபரிக்கப்படுமாற்றினை எடுத்துரைக்க.

(15 புள்ளிகள்)

**5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கு மட்டும் விடை எழுதுக**

05. சங்கப்பாடல்கள் **புறநானூறு பாடலில்,**
அ. இளமைக்காலத்து செயல்கள்
ஆ. முதுமைக்காலத்து ஏக்கம்
ஆகியன குறித்து தெளிவுறுத்துக. (10 புள்ளிகள்)

06. புகழேந்திப்புலவரின் **தனிப்பாடலில்,**

அ. சோழ நாட்டின் வளச் சிறப்பு
ஆ. சோழ மன்னனின் வீரம்
என்பன வெளிப்படுமாற்றினைத் தெளிவுறுத்துக.

(10 புள்ளிகள்)

07. பாரதியார் **சுயசரிதையில்,**
அ. சிறுமியின் அழகு
ஆ. விரும்பியதை அடையமாட்டாதவர் இயல்புகள்
ஆகியன புலப்படுமாற்றினை எடுத்துரைக்க.

(10 புள்ளிகள்)



kalvi.lk